முதலமைச்சர் அவர்கள் அன்று (24.02.2024) காணொலிக்காட்சி வாயிலாக புதுக்கோட்டை மாவட்டம்/நகராட்சி, சத்தியமூர்த்தி சாலையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.9 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, கலைஞர் நூற்றாண்டு பூங்காவினை திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை நகராட்சி, கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு பார்வையிட்டார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, நகராட்சி ஆணையர் (புதுக்கோட்டை/அறந்தாங்கி (பொ)) திருமதி.ஷியாமளா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் ரூ.2.50 கோடியில் கட்டப்பட்ட

கோத்தகிரி பணிமனை புதிய கட்டிடம் - தொழிலாளர் ஓய்வறை கட்டிடம்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

நீலகிரி, பிப். 27 -

நீலகிரி மாவட்டத்தில், சிறப்பு பகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கோத்தகிரி பணிமனை புதிய கட்டிடம் மற்றும் தொழிலாளர் ஓய்வறை கட்டிடத்தினை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் சிறப்பு பகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கோத்தகிரி பணி மனை புதிய கட்டிடம் மற்றும் தொழிலாளர் ஓய்வறை கட்டிடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், நீலகிரி நாடாளு மன்ற உறுப்பினர் ஆ.இராசா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா ஆகியோர் முன்னிலையில் 25.02.2024 அன்று திறந்து வைத்து பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள், மகளிர் கட்டணமில்லா விடியல் பயணத்தை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, குன்னூர் பேருந்து நிலையத்திலிருந்து 5 பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர்களின் நலன் அந்தந்த குடும்பங்களின் நலன் என்பதை உணர்ந்து, புதுமைப் பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் என மகளிர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து, அதனை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் குடும்ப தலைவிகளுக்கு பொருளாதார உதவியும், புதுமைபெண் திட்டம் மூலம் மாணவியர்களின் உயர்கல்வியினை உறுதி செய்தும் வருகிறார்கள்.

அதேபோல இந்த நிதியாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி, மலை பகுதிகளுக் கும் மகளிர் விடியல் பயணம் திட்டம் விரிவாக்கம் செய்து, உதகை மண்டலத்தில் மட்டும் 35 கி.மீ வரை இயக்கப்படும் மலைப்பகுதி 99 பேருந்துகளில் தற்போது பய ணிக்கும் 25,821 மகளிர்கள் மேலும் அதிகரித்து தினமும் 41,959 மகளிர் இதன் மூலம் பயன்பெறுவார்கள். இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் அரசால் அறிவித்து, செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை பொதுமக்கள் தெரிந்து கொண்டு பயன் பெற வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, குன்னூர் நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் குன்னூர் பேருந்து நிலையம் புதுப்பிக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் இன்று அமைச்சர் பெருமக்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த புதுப்பிக்கும் பணியில் தடுப்புச்சுவர் அமைத்தல், முன்பக்கம் கலர்சீட் நீட்டிப்பு, தரை ஓடு பதித்தல், சுவர் ஓடு பதித்தல், கழிப்பறை சீரமைத்தல், மேற்கூரையில் ஓடு பதித்தல், வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்வுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக (கோவை லிட்.,) மேலாண் இயக்குநர் ஜோஸப் டயஸ், தலைமை நிதி அலுவலர் கண்ணன், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் சதீஸ், பொது மேலாளர் (உதகை) நடராஜன், நகரமன்றத்தலைவர்கள் திருமதி.வாணீஷ்வரி (உதகை), திருமதி.பரிமளம் (கூடலூர்), வசீம் ராஜா ((பொ) குன்னூர்), ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் திருமதி.கீர்த்தனா (கூடலூர்), திருமதி.சுனிதா நேரு (குன்னூர்), ராம்குமார் (கோத்தகிரி), குன்னூர் நகராட்சி ஆணையாளர் திருமதி.பாரிஜான், நகராட்சிப் பொறியாளர் பாலுசாமி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராமசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.